# விசேட கல்விக்கான வளங்களை முழுமையாக பயன்படுத்துவதன் ஊடாக வலிமை பெறும் உள்ளடங்கல் கல்வி



“எமது பாடசாலையின் விசேட கல்விப் பிரிவில் கற்கும் விசேட தேவையுடைய அனைத்து மாணவர்களுக்கும் உதவக்கூடிய சக நண்பர்கள் குழுக்களை நாம் ஏற்பாடு செய்துள்ளோம்” என குருநாகல் மாவட்டத்தின் ஆரம்பப் பாடசாலை ஒன்றில் நாம் சந்தித்த மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆற்றல் மிக்க அதிபர் ஒருவர் எம்மிடம் கூறினார். அதிபர் எம்மிடம் தொடர்ந்து உரையாடியபோது, விசேட தேவையுடைய பிள்ளைகள் பாடசாலைக்கு வரும்போதும், இடைவேளையின் போதும், பாடசாலை முடிந்து செல்லும்போதும் அவர்களுக்கு உதவி தேவையா என இந்த நண்பர்கள் கேட்கின்றனர். இந்த மாணவர்களில் பலருக்கு தம்மைத் தாமே நிர்வகித்துக்கொள்ள முடியும். எனினும், இச்செயற்பாடானது அனைத்து மாணவர்களுக்கு இடையில் மற்றவர்களின் உளமறிந்து செயற்படும் மனப்பாங்கு, நட்புறவு மற்றும் ஒன்றிணைந்து செயற்படும் தன்மையை வளர்க்கின்றது. தமது சக மாணவர்களிடமிருந்து அங்கீகாரம், அன்பு மற்றும் கவனிப்பினை, விசேட தேவையுடைய மாணவர்கள் கிடைக்கப்பெறுகின்றனர். இவ்வாறு செய்யும்போது, சமத்துவமும் அனைவரையும் உள்ளடக்கிய தன்மையும் இயல்பாகவே செயற்படுத்தப்படுகின்றன. இச்செயற்பாடுகள் ஊடாக, உள்ளடங்கல் கல்வியின் நோக்கங்களை அடைய முடியும்."

விசேட கல்விப் பிரிவிற்கு நாம் சென்றிருந்த சந்தர்ப்பத்தில், மாணவர்களுக்கு இடைவேளை விடப்பட்டிருந்தது. அப்போது விசேட கல்விப் பிரிவிற்கு நண்பர் குழுக்கள் வந்து அங்குள்ள மாணவர்களுடன் நட்புடன் செயற்பட்டதை நாம் அவதானித்தோம். டவுண் சிண்ட்ரோம் எனப்படும் மனநலிவு நோய், அவதானக் குறை மிகையியக்க குறைபாடு (ADHD), பல்வேறு குறைபாடுகள் மற்றும் அறிவுசார் குறைபாடுடைய பல மாணவர்கள் இந்தப் பிரிவில் கற்கின்றனர். நாம் அவர்களை சந்திக்கச் சென்ற சந்தர்ப்பத்தில், நடனப் பயிற்சிக்குப் பின்னர் மதிய உணவை சாப்பிட்டுக்கொண்டு இருந்தனர். இளம் விசேட கல்விப் பிரிவு ஆசிரியர் ஒருவரின் உதவியுடன், சிரேஷ்ட ஆசிரியர் ஒருவர் அவர்களுக்கு வழிகாட்டிக்கொண்டிருந்தார். "நான் ஆரம்பப் பிரிவு ஆசிரியராக கடமையாற்றினேன். ஆனால், இங்குள்ள விசேட கல்விப் பிரிவிற்கு ஆசிரியர் இல்லாத காரணத்தினால் நான் விரும்பி இதனை ஏற்றுக்கொண்டேன். எனக்கு அவசியமான பயிற்சிகளை வலயக் கல்வி பணிமனை வழங்கியதோடு, அதிபர் மிகவும் உறுதுணையாக செயற்பட்டார்" என சிரேஷ்ட ஆசிரியர் எம்மிடம் குறிப்பிட்டார்.

சிரேஷ்ட ஆசிரியருக்கு உதவியாக செயற்பட்ட இளம் ஆசிரியர், சமீபத்திலேயே தேசிய கல்வியியல் கல்லூரியில் பயிற்சிகளை முடித்துக்கொண்டு வெளியேறியிருந்தார். வழமையான ஆசிரியர் பணியில் அமர்த்தப்படுவதற்கு முன்னர், விசேட கல்வியில் ஒருவருட உள்ளிருப்பு பயிற்சி உள்ளடங்கலாக, கற்பித்தலில் மூன்று வருட தேசிய டிப்ளோமாவை பூர்த்திசெய்துள்ளார். "விசேட கல்வி தொடர்பாக நாம் தேசிய கல்வியியல் கல்லூரியில் நன்கு பயிற்றுவிக்கப்பட்டோம். ஆனால், விசேட தேவையுடைய மாணவர்களுடன் நான் செயற்படுகையில், தினமும் அதிகளவிலான நடைமுறை அம்சங்களை கற்றுக்கொள்வதாக கருதுகின்றேன். ஒவ்வொரு பிள்ளையும் தனித்துவம் வாய்ந்தது" என அவர் குறிப்பிட்டார்.

"எம்மிடம் விசேட கல்விப் பிரிவிற்கான வசதிகள் கொண்ட வகுப்பறை கிடையாது. கைவிடப்பட்ட நிலையில் இருந்த இந்த அறையினை புதுப்பித்து, அதிபர் எமக்குக் கொடுத்தார். பாடசாலையை சுற்றியுள்ள அதிகளவான பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இந்த விசேட கல்விப் பிரிவு கல்வி போதிக்கின்றது. குறைந்தளவான வருமானங்களைப் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களே அதிகளவில் உள்ளனர். அத்தோடு தூரப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளுக்கு தமது பிள்ளைகளை

கூட்டிச்செல்வதில் பெற்றோர் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்" என சிரேஷ்ட ஆசிரியர் எமக்கு சுட்டிக்காட்டினார்.

இந்தப் பாடசாலை அண்மையில் ஆரம்பநிலை பாடசாலையாக மறுசீரமைக்கப்பட்டது. முன்னர் விஞ்ஞான ஆய்வுகூடமாக செயற்பட்டு கைவிடப்பட்ட இடத்தில், தற்போது விசேட கல்விப் பிரிவு செயற்படுகின்றது. இதுபற்றி அதிபர் குறிப்பிடுகையில், "வலயக் கல்வி அலுவலகத்தில் அனுமதி பெற்று, விஞ்ஞான ஆய்வுகூடங்கள் உள்ள ஏனைய பாடசாலைகளுக்கு இங்குள்ள உபகரணங்களை அனுப்பிவிட்டு இந்த இடத்தை வெற்றிடமாக்கினேன். இந்த அறையை நாம் சுத்தம் செய்தோம். ஆனால், ஏனைய மறுசீரமைப்பு பணிகளுக்கான ஒதுக்கீடுகள் இல்லை. சிரமதான நடவடிக்கை ஊடாக, பாடசாலை சமூகம் இதற்கு உதவியதோடு, நிறப்பூச்சு மற்றும் சீமெந்து போன்றவற்றிற்கு அவர்கள் உதவினர். ஜெய்க்கா நிறுவனத்தின் குழுவினர் பாடசாலைக்கு விஜயம் செய்த சந்தர்ப்பத்தில், தரைவிரிப்பு ஒன்றினை வழங்க முடியுமா என கோரியிருந்தோம். ஆனால், அவர்கள் டைல் பதிப்பதற்கான உதவியை வழங்கினர். விசேட தேவையுடைய மாணவர்களுக்கு இது மிகவும் உதவியாக உள்ளது"

ஏனைய வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதற்கு நிதி சேகரிக்கும் முயற்சிகளில் அதிபர் ஈடுபடுகின்றார். அதுவரை, நடப்பதற்கு முடியாத மாணவர்களின் நலன் கருதி தற்காலிக கைப்பிடி போன்ற சில ஏற்பாடுகள் தயார்செய்யப்பட்டுள்ளன.

தரம் 5 வரை மட்டுமே வகுப்புக்கள் இருந்தாலும், குறித்த வயதிற்கு மேற்பட்ட விசேட தேவையுடைய மாணவர்களுக்கு இப்பாடசாலை தொடர்ந்து சேவையாற்றி வருகின்றது. பாடசாலை இடைவிலகலை தவிர்க்கும் முகமாக, அவர்களை விசேட கல்விப் பிரிவில் வைத்து பராமரிக்கின்றோம். முடியுமான சந்தர்ப்பங்களில் அவர்களை நாம் தரம் ஐந்துடன் ஒருங்கிணைக்கின்றோம்" என விசேட கல்விப் பிரிவின் பொறுப்பாசிரியர் எம்மிடம் விளக்கினார்.

"விசேட கல்வியின் அவசியம் காணப்படும் மாணவர்களில் சிலரை, தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையக்கூடிய நிலைக்கு மேம்படுத்தியுள்ளோம். அவர்கள் இப்போது அருகிலுள்ள தேசிய பாடசாலைகளில் பிரதான வகுப்பறையில் கல்வி கற்கின்றனர். துரதிஷ்டவசமாக, இந்த மாணவர்களின் விசேட தேவைகளை

பூர்த்திசெய்யக்கூடிய விசேட கல்விப் பிரிவு அங்கில்லை. அவர்களது விசேட தேவைகள் தொடர்பாக பாடசாலை நிர்வாகத்திற்கு நாம் தெரிவித்துள்ளோம். ஆசிரியர்களும் அதிபரும் அவர்கள் மீது விசேட கவனம் செலுத்துவார்கள் என நம்புகின்றோம்" என அதிபர் மேலும் குறிப்பிட்டார்.

விசேட கல்விப் பிரிவை தவிர, விசேட தேவையுடைய பல மாணவர்கள் பிரதான வகுப்பறைகளில் தமது சக மாணவர்களுடன் கல்வி கற்கின்றனர். ஆசிரியர்கள் அவர்கள் மீது விசேட கவனம் செலுத்துகின்றனர். அத்தோடு, பாடசாலையில் உள்ளடங்கல் கல்விக்கு ஒருங்கிணைப்பாளராக செயற்படும் ஆசிரியரின் உதவியுடன், அவர்களது தேவைகளை நிவர்த்திக்க முயல்கின்றனர்.

"உதாரணமாக, 4ஆம் தரத்தில் கல்விகற்கும் மாணவர் ஒருவர் பாடசாலையில் பேசுவதற்கு மறுத்துள்ளார். அவரது மருத்துவ மற்றும் சமூக பின்னணியை ஆராய்ந்த நாம், அவருக்கு செவிப்புலன் குறைபாடோ, பேச்சு குறைபாடோ இல்லையென்பதை அறிந்துகொண்டோம். அவருக்கு உளவியல் ரீதியான ஆதரவை நாம் வழங்குகின்றோம். இப்போது அவர் தேர்ச்சிபெற்று வருகின்றார்" என உள்ளடங்கல் கல்வி ஒருங்கிணைப்பாளர் கூறினார்.

புதிதாக கட்டுமானம் இடம்பெறும் இடத்தை அதிபர் எமக்குக் காட்டினார். "மாணவர்களின் கல்வித் திறனை வளர்த்துக்கொள்வதற்கு அப்பால், மாணவர்கள் தமது அன்றாட பணிகளை தாங்களாகவே செய்துகொள்வதற்கான பயிற்சியை எமது விசேட கல்விப் பிரிவு ஆசிரியர்கள் மேற்கொள்கின்றனர். குறிப்பாக துணிகளை துவைத்துக்கொள்ளுதல் போன்ற திறன்களை வளர்த்துக்கொள்ளும் வகையிலேயே இந்த துவைக்கும் இடம் அமைக்கப்பட்டுள்ளது" என அதிபர் குறிப்பிட்டார்.

தமது மாணவர்கள் சுற்றுச்சூழலையும் உடைமைகளையும் நேர்த்தியாகவும் பாதுகாப்பாகவும் வைத்துக்கொள்வதற்கான பயிற்சியை, விசேட கல்விப்பிரிவு ஆசிரியர்கள் வழங்குகின்றனர். அவர்களுக்கான பாதுகாப்பானதும் அக்கறையுடையதுமான சூழலை பாடசாலை வழங்கியுள்ளதோடு, இங்கு அவர்கள் தமது சகாக்களுடன் சேர்ந்து முன்னேறிச் செல்லலாம். குறைந்தளவான வசதிகளுடன் இந்த சிறிய பாடசாலை காணப்பட்டாலும், அதிபரின் தலைமைத்துவமும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும் சேர்ந்து, ஒரு வளமான உள்ளடங்கல் கல்விச் சூழலை ஏற்படுத்தியுள்ளது.